# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சுற்றுச்சூழல்

பகுதி : **சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சுற்றுச்சூழல் பாதுகாதுப்பு என்பது உடலியல், வேதியியல், உயிரியல், சமூக மற்றும் உளவியல் காரணிகளால் தீர்மானிக்கப்படும் மனித சுகாதாரத்தின் அம்சங்களைக் (வாழ்க்கைத் தரம் உட்பட) குறிப்பதாகும்.

### சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம்

பூமியில் வாழும் மக்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் ஏதுவான சூழல் தேவை. நாம் வாழும் சுற்றுச்சூழலே நமது உடல்நலம் மற்றும் நலவாழ்வினை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். நாம் நிலையான வாழ்விற்கான ஆற்றல் மற்றும் பொருட்களுக்கான சுற்றுச்சூழலை சார்ந்து இருக்கிறோம்.

அவையாவன:

1. சுத்தமான காற்று
2. பாதுகாப்பான குடிநீர்
3. சத்தான உணவு
4. பாதுகாப்பான வாழ்விடங்கள்

ஆரோக்கியமான சூழலைப் பராமரிப்பது வாழ்க்கைத் தரத்தையும், வாழ்காலத்தையும் நீட்டிக்க அடிப்படையாகும். சுற்றுச்சூழல் காரணிகள் விரிவானவை மற்றும் தொலைநோக்குடையவை.

அவை பின்வருமாறு:

1. காற்று, நீர், மண் மற்றும் உணவு ஆகியவற்றில் உள்ள அபாயகரமான பொருட்களின் வெளிப்பாடு.
2. இயற்கை மற்றும் தொழில்நுட்ப பேரழிவுகள்
3. காலநிலை மாற்றம் வெப்பநிலை உயர வழிவகுக்கிறது.
4. தொழில் ஆபத்துகள்
5. உள்கட்டமைப்பு இல்லாமை
6. கடல்மட்ட உயர்வு சில பகுதிகளில் வெள்ளத்தை ஏற்படுத்துகிறது.

மோசமான சுற்றுச்சூழல் தரம் ஏற்கனவே மோசமான உடல்நிலை கொண்டவர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை ஒழுங்குப்படுத்த வேண்டும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள்:**

1. காற்று மாசுபாடு சுவாசப் பிரச்சினைகள், இருதய குழாய் நோய் மற்றும் நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்துகிறது.
2. நீர் மாசுபாடு வயிற்றுப்போக்கு தொடர்பான நோய்கள், கண், காது மற்றும் தொண்டை தொற்றுக்கு காரணமாகிறது.
3. அதிக அளவிலான சூரிய ஒளியில் இருத்தல் தோல் புற்றுநோய், மெலனோமா மற்றும் மேலனோமா அல்லாத சில பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.,
4. கொசு மற்றும் பிற பூச்சிகள் கடிப்பதால் டெங்கு, மலேரியா போன்ற நோயகள் ஏற்படுகின்றன.
5. ஒலி மாசுபாடு தூக்கக் கோளாறு, காது கேளாமை மற்றும் இதயம் தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.
6. சிலிக்கா தொழிற்சாலைள் அல்லது தளத்தை மணல் மூலம் சுத்தம் செய்யும் இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நுரையீரல் அதிகஅளவு சிலிக்கா தேங்குவதால் சிலிகோகிஸ் என்ற நோய் ஏற்படுகிறது.
7. நுரையீரல் கல்நார் சேர்வதால் அஸ்பெஸ்டாசிஸ் ஏற்படுகிறது.
8. அதிகளவிலான காட்மியம் இடாய் – இடாய் நோயை ஏற்படுத்துகிறது.
9. பெட்ரோலியம் மற்றும் கச்சா எண்ணெய் எரிப்பதன் மூலம் வெளியிடப்படும் சல்பர் ஆக்சைடு கடுமையான புகை மூட்டத்தை ஏற்படுத்துகிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம்**

சுகாதாரத்தில் சுற்றுச்சூழல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளின் தாக்கத்தை மதிப்பட சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. காலநிலை மாற்றம், காற்று மாசுபாடு மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளை இம்மையம் மதிப்பீடு செய்யும். டாடா சமூக அறிவியல் நிறுவனம் (TISS) மற்றும் இந்திய பொது சுகாதார அறக்கட்டளை (PHFI) ஆகியவற்றின் கூட்டு முயற்சியே இம்மையமாகும். இது நீர், ரசாயன வெளிப்பாடு உள்ளிட்ட பல்வேறு வகையான சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராயும். இது சுற்றுச்சூழலுக்கு உகந்த கொள்கைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கான உத்திகள் உருவாக்க குடிமையியல் சமூகம். அரசு, கல்வியில் சிறந்ததோர் மற்றும் தனியார் துறைகள் வழக்கமான சந்திப்புகளை மேற்கொள்ள கொள்கை ஈடுபாட்டு தளத்தை உருவாக்கும்.

## துப்புரவு

உலக சுகாதார நிறுவனம் – துப்புரவு என்பது பொதுவாக மனித கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்கான வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குவதைக் குறிக்கிறது. மேலும் இச்சொல் குப்பை சேகரிப்பு மற்றும் கழிவுநீர் அகற்றுதல் போன்ற சேவைகளின் மூலம் சுகாதாரமான நிலைமைகளைப் பராமரிப்பதைக் குறிக்கிறது. ஒரு பாதுகாப்பான துப்புரவு அமைப்பு என்பது மனிதக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவதற்காக

வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் ஒரு அமைப்பாகும். போதிய துப்புரவின்மை உலகெங்கிலும் நோய்க்கு முக்கிய காரணமாகும். துப்புரவை மேம்படுததுதல் வீடுகள் மற்றும் சமுதாய சுகாதாரத்தில் குறிப்பிடத்தக்க நன்மை பயக்கும்.

**அரசின் இலக்குகள்:**

**I. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்**

புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளின் தொடர்ச்சியான நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (2015-2030) சுத்தமான நீர் கிடைக்கும் தன்மை மற்றும் அவற்றின் நிலையான மேலாண்மையை உறுதி செய்வதற்கான இலக்கு 6 - சுத்தமான நீர் மற்றும் துப்புரவையும் உள்ளடக்கியது. இலக்கு 6. குறிப்பிாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் 2030க்குள் அனைவருக்கும் பாதுகாப்பான, மலிவான குடிநீருக்கான சமமான அணுகலை அடைய வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

மேலும் இலக்கு 6.2 - 2030க்குள் அனைவரும் போதுமான சமத்துவ நிலையில் சுகாதாரம் மற்றும் தூய்மையான சூழலைப் பெறுதல், திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல், நெருக்கடியான நிலைகளில் பெண்கள் மற்றும் சிறுமியரின் தேவைகளில் போதிய கவனம் செலுத்துதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. சூழலியல் கழிப்பிடம்** (ECO - San toilets)

இந்தியாவில் ஒரு தனிநபர் சராசரியாக 150லிட்டர் கழிவுநீர் உற்பத்தியாக காரணமாகிறார். மேலும் அதில் பெருமளவு கழிப்பறைகளிலிருந்தே உற்பத்தி செய்யப்படுகிறது. சூழலியல் துப்புரவு என்பது மனித கழிவுகளை உலர் கழிப்பறைகளைப் பயன்படுத்தி மேலாண்மை செய்யும் நிலையான முறையாகும். சூழலியல் கழிப்பறைகள் கழிவுநீர் உற்பத்தியைக் குறைப்பது மட்டுமல்லாமல், ரசாயன உரங்களுக்கு சிறந்த மாற்றான மறுசுழற்சி செய்யப்பட்ட மனிதக் கழிவுகளில் இருந்து இயற்கை உரத்தையும் உருவாக்குகின்றன.

இந்த முறையானது மனிதக் கழிவுகளில் இருந்து ஊட்டச்சத்துக்களை மீட்டெடுத்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் மூலம விவசாயத்திற்கு தேவையான பொருட்களை வழங்குதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**3. தூய்மை பாரதத் திட்டம்**

அனைவருக்குமான துப்பரவை அடைவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துவதற்காகவும், துப்புரவில் கவனம் செலுத்துவதற்காகவும் இந்தியப் பிரதமர் அக்டோபர் 2, 2014-ல் தூய்மை பாரத் திட்டத்தை தொடக்கி வைத்தார். இதன் ஒருங்கிணைப்பாளர் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் செயலாளர் ஆவார். தூய்மை பாரதத்திட்டமானது தூய்மை பாரதத்திட்டம் (கிராமம்) மற்றும் தூய்மை பாரதத் திட்டம் (நகரம்) என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளை சிறப்பு செய்வதற்காக 2019க்குள் தூய்மை பாரதம் என்ற இலக்கை அடைவதை நோக்கமாக கொண்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்டத்தின் (கிராமம்) நோக்கம் அக்டோபர் 2,2019க்குள் தூய்மை மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற இந்தியாவை அடைவதாகும்.

**குறிக்கோள்கள்**

1. தூய்மை, சுகாதாரம், திறந்தவெளி மலம் கழித்தலை நீக்குதல் போன்றவற்றை ஊக்குவித்தலின் மூலம் கிராமப்பற வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
2. சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துல் மூலம் ஏற்புடைய நீடித்த சுகாதார முறைகளை பின்றபற்ற சமுதாயத்தை ஊக்குவித்தல்.
3. சூழலுக்கு உகந்த பாதுகாப்பான சுகாதார முறைகளுக்காக குறைந்த செலவுடைய மற்றும் தகுந்த தொழில்நுட்பத்தப் பயன்படுத்த ஊக்குவித்தல்.
4. துப்புரவுமுறைக்கான சமூகப் பங்களிப்பை மேம்படுத்துதல்.
5. அறிவியல்பூர்வமான திட, திரவக் கழிவுகள் மேலாண்மை திட்டத்தின் மூலமாக, கிராம சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
6. பாலியல் சார் நேர்மறை எண்ணங்கள் உருவாக்கம்.
7. விளிம்பு நிலை மக்களை உள்ளடக்குவதன் மூலம் சுகாதார மேம்பாடு.

**4. உயிரி - கழிப்பறைகள்**

இந்திய ரயில்வே, செப்டம்பர் 2019க்குள் அனைத்து ரயில் பெட்டிகளிலும் மனிதக் கழிவுகள் வெளியேற்றலற்ற உயிரி கழிப்பறைககள் அமைத்தலை நோக்கமாக கொண்டுள்ளது. இது தூய்மை மற்றும் சுகாதாரம் வழங்குதலுடன், தண்டவாளங்கள், துருப்பிடித்தலைத் தடுக்கிறது. இது தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாகும். பயணியர் இரயில் பெட்டிகளுக்கான இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரி கழிப்பறைகள் இந்திய ரயில்வே மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) இணைந்து உருவாக்கியவை ஆகும்.

இந்த உயிரி கழிப்பறை பொருத்தப்பட்ட இரயில் பெட்டிகளில் மனித கழிவுகள் கழிப்பறைக்கு கீழே உள்ள உயிர் சிதைவுத் தொட்டிகளில் (Bio-digester tanks) சேகரிக்கப்பட்டு காற்றில்லா பாக்டீரிய சிதைவு மூலம் மட்கச் செய்யப்படுகின்றன.

நீராற்பகுப்பு, அசிட்டோஜெனிசிஸ், ஆசிடோஜெனிசிஸ் மற்றும் மெத்தனோ ஜெனிசிஸ் ஆகிய முறைகளின் மூலம் காற்றில்லா பாக்டீரியா மனிதக் கழிவுகளை நீர் மற்றும் சிறிய அளவிலான வாயுக்களாவும் (மீத்தேன் உட்பட) மாற்றுகிறது.

**5. ஸ்வஜல் யோஜனா**

1. நிலை குடிநீர் விநியோகம் அளிப்பதற்காக, மக்களால் சொந்தமாக அமைக்கப்படும் குடிநீர் திட்டமே ஸ்வஜல் ஆகும்.

2. ஆண்டு முழுவதும் அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிநீர் வழங்குவதுடன் இந்த திட்டம் வேலைவாய்ப்பையும் உருவாக்கும்.
3. இத்திட்டத்தில் 90% செலவு அரசால் ஏற்கப்படுகிறது. மீதமுள்ள 10% செலவு மக்களால் பாதிக்கப்படுகிறது.
4. திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மேலாண்மை உள்ளூர் மக்களால் நிர்வகிக்கப்படும்.
5. இத்திட்டத்தின் கீழ், கிராம மக்களுக்கு சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் இயங்கும் குழாய் நீரை விநியோகித்தலை அரசு நோக்கமாக கொண்டுள்ளது.
6. ஸ்வஜல் அலகுகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்புக்காக நூற்றுக்கணக்கான கிராமப்புற தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
7. 115 பின்தங்கிய மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சட்டம் என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் உதவும் ஒரு கருவியாவும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் அல்லது மாசுபடுத்தும் வாய்ப்புள்ள எந்தவொரு செயலையும் கட்டுப்படுத்தவோ அல்லது தடுக்கவோ பயன்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலுடன் நாட்டில் உள்ள காடுகள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாத்தல் அரசின் கடமை என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனுக்கும் காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கை சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல் அடிப்படை கடமையாகும்.

சுற்றுச்சூழலை பற்றிய குறிப்புகள் அரசின் நெறிமுறை கோட்பாடுகள் (பகுதி IV) மற்றும் அடிப்படை உரிமைகள் (பகுதிIII) ஆகியவற்றிலும் இடம் பெற்றுள்ளன.

நாட்டின் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை உறுதி செய்ய 1980-ல் சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது. இது பின்பு 1985-ல் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமாக மாறியது.

## இந்திய அரசியலமைப்பு

1. இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 21-ல் உள்ள 'வாழ்வதற்கான உரிமை' என்பது சுத்தமான மற்றும் மனித சூழலுக்கான உரிமையை உள்ளடக்கியது. சுத்தமான, ஆரோக்கியமான சூழலில் வாழ மக்களுக்கு உரிமை உண்டு என்பதே இதன் பொருள் ஆகும்.
2. ஷரத்து 38ஆனது மக்களின் நலவாழ்வினை மேம்படுத்துவதற்காக சமூக ஒழுங்கினைப் பாதுகாத்தலைக் குறிப்பிடுகிறது. இது மாசற்ற, தூய்மையான சூழலால் மட்டுமே அடைய முடியும்.
3. ஷரத்து 48B சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படுவதுடன், காடுகளும் வன விலங்குகளும் பேணிக்காக்கப்படுவதை பற்றி குறிப்பிடுகிறது.
4. ஷரத்து 51A(g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல் ஒவ்வொரு குடிமகளின் கடமை எனக் குறிப்பிடுகிறது.

## வினாக்கள்

1. சுற்றுச்சூழல் துப்புரவு குறித்த அரசின் இலக்குகள் யாவை?
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு வரைக.